புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • பிப்ரவரி (FEBUARY), 05 2026 • புரட்சி 26 • முழக்கம் (ISSUE) 6 • விலை (PRICE) ரூ.6.00



# அமோக வரவேற்பை பெற்ற நிமிர்வோம் பதிப்பகம்!

சனவரி 8 முதல் 21 வரை, 14 நாட்கள், சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நடந்த 49-வது சென்னை புத்தகக் காட்சியில், கழகத்தின் நிமிர்வோம் பதிப்பகம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. 4 லட்சம் ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனையாகியுள்ளன. ம.கி. எட்வின் பிரபாகரன், புத்தகக் காட்சி சார்ந்த அனைத்து பணிகளையும் ஒருங்கிணைத்தார். நிமிர்வோம் பதிப்பகத்துக்கு அரங்கை ஒதுக்கித் தரக்கோரி, தோழர்கள் தபசி குமரன், கு. அன்பு தனசேகர். பிரகாசு ஆகியோர் விண்ணப்பித்து, அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டனர். புத்தகக் காட்சி தொடங்குவதற்கு முந்தைய நாள் இரவு, நிமிர்வோம் அரங்கை அமைக்கும் களப்பணியில் தோழர்கள் தபசி குமரன், ம. கி. எட்வின் பிரபாகரன், ஆ.வ. வேலு, ர. பிரகாசு, பேரன்பு, தாமரை, ஸ்ரீலேகா, மடிப்பாக்கம் அருண், புகழேந்தி, சிபி ஆகியோர் ஈடுபட்டனர். விளம்பர பதாகை காவை. இளவரசன் செய்து கொடுத்தார்.















அரங்கில் வைக்க வேண்டிய 300 புத்தகத் தலைப்புகளின் பட்டியலை, தோழர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன் - அருண் கோமதி இணைந்து தயாரித்தனர். 40க்கும் மேற்பட்ட பதிப்பகங்களை எட்வின் முன்கூட்டியே தொடர்பு கொண்டு, தேவைப்படும் நூல்களின் பட்டியலையும் அனுப்பி, அனைத்து நூல்களையும் முதல்நாளே அரங்கில் இடம்பெறச் செய்தார். கழக நூல்களை அச்சிடும் பணியையும், அவற்றை அரங்குக்கு அனுப்பிவைக்கும் பணியையும் தோழர் பிரசாந்த் கவனித்துக் கொண்டார். நூல் வடிவமைப்பு தயாரிப்புப் பணிகளில் தோழர்கள் விஜய் குமார், ர. பிரகாசு, மு.க. தினேஷ் குமார், கு. அன்பு தனசேகர், இரா. உமாபதி, இராம. இளங்கோவன் ஆகியோர் முக்கிய பங்காற்றினர். புத்தகக்காட்சி முடிந்தபின், இறுதிநாளில் ஆயிரக்கணக்கான கழக நூல்பிரதிகளை பொதிந்து, தலைமை அலுவலகத்துக்கு அனுப்பும் பணியை தோழர்கள் இரா. உமாபதி, ம.கி. எட்வின் பிரபாகரன், சுகுமார், ப. அருண், இரண்யா, பேரன்பு, குமார், சூர்யா, ஷர்மிளா, முத்துராஜ், சுகந்தன், மஞ்சுநாதன், வீரா ஆகியோர் செய்தனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், கே. பாலகிருஷ்ணன் (சிபிஎம்), வழக்கறிஞர் திருமூர்த்தி, வன்னி அரசு (விசிக), சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி (விசிக), தபுக தலைவர் நாகை திருவள்ளுவன், தோழர் பேரறிவாளன், ஊடகவியலாளர்கள் இந்திரகுமார் தேரடி, U2BRUTUS மைனர், மகிழவன், ஞான சத்யா, எழிலரசன், ரவுத்திரா, ஜெயபிரகாஷ், தியாகச் செம்மல், எழுத்தாளர்கள் சுகுணா திவாகர் , வாசிமபதம சரவணகுமார், இனியன் ராமமூர்த்தி, ஸ்ரீ பாட்டர், சைதை மா. அன்பரசன் (திமுக), தமிழீழ முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், கவிஞர் விடுதலை சிகப்பி, கழகத் தோழர்கள் மயிலாடுதுறை இளையராஜா, முருகேசன், மா. வேழவேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், ந. தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட பல ஆளுமைகள் அரங்குக்கு வருகைதந்து ஊக்கப்படுத்தினர்.

தோழர்கள் சுகுமார், இரண்யா, காவை அஜித், பேரன்பு, இளவரசன், பிரசாந்த், தேன்மொழி, பாரி சிவா, மேட்டூர் முத்துராஜ், சைதை சிவா, ஷர்மிளா, அஸ்வின், இம்மேனுவல் துரை, பிரனேஷ், தாமரை, லீலா, தீபக், ஸ்ரீலேகா, சுரேந்தர், இலக்கியா, புகழேந்தி, அபிநந்தன், நந்தகுமார், சதீஷ் கண்ணன், அறிவுமதி, பூர்ணிமா, இளைய சிம்மன், சுபாஷ் ஆனந்த், ஹானஸ்ட் ராஜ், குருபிரசாத், செல்வம் உள்ளிட்ட 35-க்கும் மேற்பட்ட இளைஞரணி தோழர்கள் புத்தக விற்பனையில் ஈடுபட்டனர். அரங்கை மக்களிடம் அறிமுகப்படுத்தும் வீடியோவை SVK குழுவினர் தயாரித்து பரப்பினர்.

புத்தகங்களின் எண்ணிக்கை குறையும்போதெல்லாம், மற்ற பதிப்பக நூல்கள் அரங்குக்கு கொண்டு வரப்பட்டு நிரப்பப்பட்டன. அதேபோல, கழக நூல்களும் மற்ற அரங்குகளுக்கு விநியோகிக்கப்பட்டன. ஊடகவியலாளர் குணசேகரன் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய "திராவிடப் பெரியார் யாருக்கு எதிரி?" நூலை 2000 பிரதிகள் இலவசமாக அச்சசடித்து தந்தார். மேலும் இந்நூல் சிறப்பு தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்பட்டது. நூல் 300 பிரதிகள் விற்றது குறிப்பிடத்தக்கது. கழக வெளியீடுகள் மற்றும் "தீ பரவட்டும்", "பெண் ஏன் அடிமையானாள்?" ஆகிய நூல்களும் அதிக எண்ணிக்கையில் விற்றிருந்தன. அரங்கில் வைக்கப்பட்டிருந்த, தோழர் சிகரன் வரைந்த பெரியார் சட்டகப்பலகை (frameboard) , குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவர்ந்திழுத்தது. 2000க்கும் மேற்பட்டோர் செல்ஃபி எடுத்துக்கொண்டனர்.

அடுத்த முறை, மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளை செய்து தருமாறும், புது உறுப்பினர்களுக்கான சேர்க்கையை தொடங்குமாறும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்துக்கு, பதிப்பகம் சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டது. எதிர்வரும் 2027 புத்தகக்காட்சிக்கான நூல் தயாரிப்புப் பணிகளை, விரைவில் தொடங்கி, புத்தகக்காட்சிக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே அச்சுப்பணியையும் செய்துமுடிக்க, தோழர்கள் உறுதியேற்றனர்.

**செய்தி- எட்வின் பிரபாகரன்**

# தோழர் திருமா பேசியதில் என்ன தவறு?

முத்துக்குமார் நினைவேந்தல் கூட்டத்தில் பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர் திருமாவளவன், **“எனக்கு எந்த அரசன் மீதும் மதிப்பு கிடையாது. எவனையும் பெரிய சக்தியாகப் பார்க்கவில்லை. அந்த மன்னர்கள் காலத்தில்தான் இந்த நாடு குட்டிச்சுவர் ஆனது. சமஸ்கிருதமயமானது, இந்துத்துவமயமானது. கோயிலின் கருவறைக்குள்ளே இருந்த தமிழ் தூக்கி வெளியே வீசப்பட்டதெல்லாம் இந்த பாண்டிய மன்னர்கள், சோழ மன்னர்கள், சேர மன்னர்கள், பல்லவ மன்னர்கள் ஆண்ட காலத்தில்தான். வேள்வி நடத்தியவன் யாகம் நடத்தியவன் எல்லாம், தமிழ் பெயர்களை மாற்றி வடமொழிப் பெயர்களை தங்கள் பெயருக்குப் பின்னால் சூட்டிக்கொண்டார்கள்.**



**ராஜ ராஜன் என்பது தமிழ்ப் பெயரா? ராஜேந்திரன் என்பது தமிழ்ப் பெயரா? எல்லாரும் வடமொழிப் பெயர்களைச் சூட்டிக் கொண்டவர்கள். வடமொழியிலேயே மயங்கிக் கிடந்தவர்கள். பார்ப்பனர்களின் வேள்வி, யாகங்களில் மயங்கிக் கிடந்தவர்கள். அவர்கள் எப்பேர்ப்பட்ட மன்னாதி மன்னர்களாக இருந்தாலும், என் தமிழ் அழிவதற்கும், கலாச்சாரம் அழிவதற்கும் வழிவகுத்தவர்கள் அவர்கள் என்பதை உணர்ந்தவன் நான். எனவே எனக்கு ஆண்ட பரம்பரை என்று சொல்வதில் எந்த பெருமையும் இல்லை. அதில் உடன்பாடும் இல்லை”** என்று கூறியதற்காக பா.ஜ.க.வும் அதன் நேரடி மற்றும் மறைமுகக் கூட்டணியில் இருக்கும் அடியாட்களும் தோழர் திருமாவளவன் மீது கடுமையான விமர்சனங்களை வைத்து வருவது மிகுந்த கண்டனத்திற்குரியது.

தோழர் திருமா பேசியதில் என்ன தவறு இருக்கிறது? சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் "பொற்கால ஆட்சி" நடத்தியதாக கொண்டாடுவதில் அடிப்படை உண்மை எதாவது இருக்கிறதா? அந்த பொற்கால ஆட்சியில் எத்தனை தமிழர்கள் படித்திருந்தார்கள்? எத்தனை தமிழர்கள் நல்ல வேலைவாய்ப்பு பெற்றிருந்தார்கள்? எத்தனை தமிழர்களுக்கு 3 வேளை உணவு கிடைத்தது? தமிழ் மன்னர்கள் வருணாசிரம தர்மத்தை பாதுகாக்கும் பார்ப்பனிய காவலர்களாக இருந்தார்கள் என்பதே உண்மை. அதைத்தான் பெரியாரும் கூறியிருக்கிறார். மன்னர்கள் தங்கள் ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவும், தங்களை தெய்வீகத் தன்மை கொண்டவர்களாகக் காட்டிக்கொள்ளவும் பார்ப்பனர்களின் துணையை நாடினர். மனுதர்ம சட்டங்களை நடைமுறைப்படுத்தி, ஜாதி ஏற்றத்தாழ்வுகளை சமூகத்தில் ஆழமாக வேரூன்றச் செய்தனர். வரிக்கு மேல் வரி வசூலித்து, மக்களின் உழைப்பைச்சுரண்டி மிகப்பெரிய கோயில்களை கட்டி, அந்த கோயில்களையெல்லாம் பார்ப்பனர்களிடத்தில் ஒப்படைத்த பெருமைகள் எல்லாம் இந்த தமிழ் மன்னர்களைத்தான் சேரும். அந்த கோயில்களில் சமஸ்கிருத பண்பாடும், ஆரியக் கடவுள்களும், யாகங்களும்தான் இடம்பெற்றன. பார்ப்பனர்களுக்கு நிலங்களை தானமாக வழங்கியதும், தேவதாசி முறையை வளர்த்தெடுத்ததும் ராஜ ராஜ சோழன் என்ற வரலாற்று உண்மையைத்தான் இவர்களால் மறைக்க முடியுமா? விவசாயிகள், விளைச்சலில் ஆறில் ஒரு பங்கை வரியாக செலுத்த வேண்டியிருந்தது. அந்த வரிக்குக் ‘கடமை’ என்றும் பெயரிட்டிருந்தார்கள்.

தமிழ்நாட்டில் கிடைத்த கல்வெட்டுகளில் தீண்டாமை பற்றிய முதல்குறிப்பு இராசராச சோழனின் ஆட்சிக் காலத்தில் வந்துள்ளது என்பதை வரலாற்று அறிஞர் ரொமிலா தாப்பர் தனது ஆய்வுகளில் சுட்டிக்காட்டியுள்ளார். ஊருக்கு வெளியே தீண்டாச்சேரியும், பறைச்சேரியும் இருந்ததைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஒவ்வொரு ஜாதிக்கும் தனித் தனிச் சுடுகாடுகள் இருந்தன. முதலாம் இராசராசன் மற்றும் இராசேந்திரனின் ஆட்சிக்காலத்தில் பிரமதேய கிராமங்களின் (பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட கிராமங்கள்) தனித்தன்மையைக் காக்க வேண்டி இதர வகுப்பினர்களின் நில உரிமைகள் சுருக்கப்பட்டன என்கிறார் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி. அகரம், அக்ரஹாரம், சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம் எனப் பல பெயர்களில் தானமாக வழங்கப்பட்ட கிராமங்களில் எல்லாவிதமான வரிகள், கட்டணங்கள், ஆயங்கள், கடமைகளில் இருந்தும் பார்ப்பனர்களுக்கு முழு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. மொத்தம் 250 ஊர்கள் சோழர்ர்கள் காலத்தில் பார்ப்பனர்களுக்கு தானமாக வழங்கப்பட்டன.

‘உயர் கல்வியானது ஜாதி தழுவியே கற்பிக்கப்பட்டது. மடங்கள் - கோயில்களைச் சார்ந்த பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இது பயிற்றுவிக்கப்பட்டது. நான்கு வேதங்கள், சூத்திரங்கள், ரூபாவதரா இலக்கணம் போன்றவையே பாடத்திட்டங்கள். சோழர்கள் ஆட்சியில் அனைத்து மக்களுக்கும் தமிழ் கல்வி முறை கற்பிக்கப்பட்டதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை. கணவன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கமும் சோழ மன்னர்கள் காலத்தில் இருந்தது. இராசராசனின் தந்தையான சுந்தர சோழன் இறந்தபோது அவருடைய மனைவி வானவன்மாதேவியும் உடன்கட்டை ஏற்றப்பட்டார் என்பதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. மன்னர்களைப் போற்றுவது என்பது அடிமை மனநிலையின் வெளிப்பாடு. நாம் மன்னர்களை மறந்துவிட்டு, நவீன ஜனநாயக விழுமியங்களை நோக்கி நகர வேண்டும் என்பதே பெரியாரின் சிந்தனையாக இருந்தது. கடந்த காலப் பெருமைகளைப் பேசிக்கொண்டே இருப்பது, தமிழர்களின் அறிவியல் மற்றும் சமூக வளர்ச்சிக்குத் தடையானது என்றுதான் பெரியார் கருதினார். பெரியாரின் அந்த கருத்தியல்போக்கில் தோழர் திருமா வெளிப்படுத்தியிருக்கும் இக்கருத்து வரவேற்கத்தக்கது. தேர்தல் அரசியலுக்காக மன்னர்களை போற்றும் பழமைவாத கருத்துக்களை மற்ற அரசியல் கட்சிகளும் விட்டொழிக்க வேண்டும். அவர்கள் கடைபிடித்த வருணாசிரம சிந்தனைகளை தோலுரிக்க வேண்டும். அதுதான் தமிழர்களின் நலனுக்கானதே தவிர, இத்தகைய பிற்போக்கு மன்னர்களின் புகழைப்பாடுவது எந்தக் காலத்திலும் ஒருவருக்கும் பயன்படாது!

## தலையங்கம்

# நீதித்துறையில் காவி ஆடுகள்!

“சனாதன ஒழிப்பு” பற்றி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு முற்போக்கு கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர் சங்க மாநாட்டில் பேசியது குறித்து சமூக வலைதளத்தில் எதிர்வினை ஆற்றிய, சங்கி அமித் மாளவியா “80 சதவிகிதமான மக்களை இனப்படுகொலைக்கு ஆளாக்க சொல்கிறீர்களா?” என்று பதிவிட்டிருந்தார். சனாதனத்தை ஒழிக்க வேண்டுமென்றால் சனாதனம் என்ற பெயரில் நிலைநிறுத்தப்பட்டிருக்கிற பாகுபாடுகளை ஒழிக்க வேண்டுமென்பதுதான் அர்த்தமே தவிர, அதைப் பின்பற்றுகிற இந்துக்களை கொல்ல வேண்டுமென்பது அர்த்தம் கிடையாது. இது தெரிந்திருந்தாலும் சங்கிகள், இதைப்பயன்படுத்தி ஒரு சமூகப் பதற்றத்தை உருவாக்கலாம், அதன் மூலம் தமிழ்நாட்டில் திராவிட அரசியலுக்கு எதிராக ஒரு வெறுப்புணர்வை உருவாக்கலாம் என்ற உள்நோக்கத்தோடு வன்ம கருத்துக்களை பரப்பினர்.

இதனால், அமித் மாளவியாவுக்கு எதிராக திருச்சி நகர காவல் துறை வழக்குப்பதிவு செய்திருந்தது. அந்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்துள்ள மதுரை உயர்நீதிமன்ற கிளையின் தனி நீதிபதி ஸ்ரீமதி, அரசியலமைப்புக்கு புறம்பான, பல்வேறு அபத்தமான கருத்துக்களை தெரிவித்துள்ளார். “சனாதன ஒழிப்பு என்ற சொல்லாடல், அந்தத் தர்மத்தைப் பின்பற்றும் மக்களை ஒழிப்பதைக் குறிக்கும் ’இனப்படுகொலைக்கு’ (Genocide) சமமானது. ஒரு மதத்தையே ஒழிக்க வேண்டும் என்று கூறுவது ’மதப்படுகொலை’ (Religicide) ஆகும். இது போன்ற வெறுப்புப் பேச்சுகளைப் பேசுபவர்கள் தப்பித்து விடுகிறார்கள், ஆனால் அதற்கு எதிர்வினை ஆற்றுபவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்குகிறார்கள் என்பது வேதனையளிக்கிறது. கடந்த 100 ஆண்டுகளாக திராவிடக் கட்சிகள் இந்து மதத்திற்கு எதிராகத் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. அதன் ஒரு பகுதியே இந்த சனாதன ஒழிப்புப் பேச்சு” என்று ஒரு ஆர்.எஸ்.எஸ். வாதியாகவே மாறி நீதிபதி தன் அரசியலமைப்பு கடைமையை தவறி கருத்து தெரிவித்திருக்கிறார்.

சனாதனத்தை ஒழிப்பது என்றால் இந்துக்களை ஒழிப்பது என்று அர்த்தமானால், ‘நீதி செத்துவிட்டது’ என்றால் நீதிபதிகள் செத்துவிட்டார்கள் என்று அர்த்தமாகுமா? பெரியாரை அழிக்க வேண்டுமென்று சங்கிகள் சொல்கிறார்களே? அப்படியானால் பெரியார் கொள்கைகளைப் பின்பற்றுகிற லட்சக்கணக்கானோரை கொல்ல வேண்டுமென்ற அர்த்தத்தில்தான் இதைச் சொல்கிறார்களா? திராவிடத்தை ஒழிக்க வேண்டுமென்று சங்கிகள் கூறுவது, தென்னிந்தியாவில் வாழும் சுமார் 30 கோடி மக்களையும் கொல்ல வேண்டுமென்று பொருள்படுமா? இடஒதுக்கீட்டை ஒழிக்க வேண்டுமென்று நீண்ட காலமாக கூறிக்கொண்டு இருக்கிறீர்களே? அப்படியானால் இந்த நாட்டில் இடஒதுக்கீட்டை பெறுகிற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் அனைவரையும் கொன்றழிக்க வேண்டும் என்ற அர்த்தத்தில்தான் இதைச் சொல்கிறீர்களா? என்கின்றன எண்ணற்ற கேள்விகளை நாம் அவர்களைப் பார்த்து எழுப்ப வேண்டியிருக்கிறது. சங்கிகளைப் பார்த்து எழுப்ப வேண்டிய இந்தக் கேள்விகளையெல்லாம் இப்போது நீதித்துறையில் ஒளிந்திருக்கிற காவி ஆடுகளைப் பார்த்தும் எழுப்ப வேண்டிய நிலைக்கு நாடு வந்திருக்கிறது.

அதேபோல சமீபத்தில், “சனாதன தர்மத்தை மனதில் வைத்து எஞ்சிய பணிக்காலத்தில் சிறப்பாகப் பணியாற்றுவேன்” என்று உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் கூறியிருக்கிறார். நான்கு வர்ணங்களாக மக்களைக் கூறுபோடுவதுதான் சனாதனம். இன்னாருக்கு இன்ன தண்டனை என்று பாகுபடுத்துவதுதான் சனாதன தர்மத்தின் வழக்கம். அந்த தர்மத்தின்படி எப்படி தீர்ப்பு வழங்க வேண்டுமென்று மனு சாஸ்திரம் தெளிவாகக் கூறுகிறது.

> பிராமணனுக்குத் தலையை மொட்டை அடித்தால் போதும். அதுவே உயிர்த் தண்டனைதான். ஏனையோருக்கு உயிர்த் தண்டனையே உண்டு– (மனு 8:378).
>
> ‘எந்தப் பாவம் செய்த போதிலும், பிராமணனைக் கொல்லாமல், காயமின்றி அவன் பொருளுடன் ஊரை விட்டுத் துரத்துக – (மனு 8:379).
>
> “பிராமணரிடத்தில் ‘கூறுக’ என்றும், க்ஷத்திரியனிடத்தில் ‘உண்மையைக் கூறுக’ என்றும், வைசியனிடத்தில் அவனுடைய ‘பசுக்கள், பொன், தானியங்கள் மேல் ஆணையிட்டுக் கூறுக’ என்றும், சூத்திரனாயின் ‘தலைமீது ஆணையிட்டு, பொய் கூறினால் வரும் கேடுகளைக் கூறி அச்சுறுத்திக் கூறுக’ என்றும் பிரமாணம் செய்க – (8.88).
>
> “க்ஷத்திரியர் முதலான மூவகைக் கீழ் வருணத்தார் பொய்ச் சாட்சி கூறினால் அரசன் முதலில் அபராதம் விதித்துவிட்டுப் பிறகு அவர்களை நாடு கடத்த வேண்டும்ட் ஆனால் பிராமணராயின் நாடு கடத்தல் மட்டுமே செய்ய வேண்டும் – 8:123”
>
> “புரோகிதனுக்கு அவதூறு இழைக்கும் க்ஷத்திரியனுக்கு நூறு பணமும், அவ்வாறு தவறிழைக்கும் வைசியனுக்கு நூற்றைம்பது அல்லது இருநூறு பணமும், ஒரு அடிமையோ, தொழிலாளியோ தவறிழைத்தால் கசையடியும் விதித்தல் வேண்டும். – (8:267). ஆனால் “ஒரு புரோகிதர் க்ஷத்திரியனுக்கு அவதூறு விளைவித்தால் ஐம்பது பணமும், வைசியனுக்கு அவதூறு விளைவித்தால் பன்னிரண்டு பணமும் அபராதம் விதித்தல் வேண்டும் – 8:268”.

என்றெல்லாம் வர்ணத்திற்கு ஒரு தண்டனை விதித்திருக்கிறது மனு சாஸ்திரம். சனாதன தர்மத்தை பின்பற்றும் சாமிநாதன் இதனடிப்படையில்தான் தீர்ப்பு வழங்குவாரா? அப்படியென்றால் தொடர்ந்து அவர் இப்பதவியில் நீடிக்கலாமா? நீதித்துறையில் குறிப்பிட்ட ஒரு சமூகமும், குறிப்பிட்ட இந்துத்துவ சித்தாந்தத்தை பின்பற்றுவோரும் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் நிலை தொடர்வது ஒன்றே, இத்தகைய அபத்தமான கருத்துக்களும், தீர்ப்புகளும் வர காரணமாக இருக்கிறது. எனவே நீதிபதிகள் நியமனத்திலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவது அவசியமாகிறது. நீதித்துறையை சீரழிக்கும் இத்தகைய நச்சுக்கருத்துக்களை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி, ‘நீதித்துறையில் ஏன் இட ஒதுக்கீடு அவசியமாகிறது’ என்ற நோக்கத்திற்கு வலு சேர்க்கும் முயற்சிகளில் முற்போக்காளர்கள் ஈடுபட வேண்டும்.

# எமர்ஜென்சியும் பார்ப்பனர்களும்!

*50-ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் தான் ஜனவரி 31 அன்று தமிழ்நாட்டில் முதல் முறையாக கலைஞர் தலைமையில் நடந்த திமுக ஆட்சி ஒன்றிய அரசால் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அப்போது அவசர நிலை அமுலில் இருந்த காலம். அதாவது மக்களின் அடிப்படை உரிமைகள் நிறுத்தி வைக்கப்பட்டு பேச்சுரிமை, எழுத்துரிமை அரசியல் உரிமைகள் அத்தனையும் பறிக்கப்பட்டிருந்தது.*

*இந்த அடக்குமுறை சர்வாதிகாரத்தை எதிர்த்து துணிவோடு குரல் கொடுத்தார் கலைஞர். சென்னை கடற்கரையில் பல லட்சம் மக்களை திரட்டி அவசர நிலைக்கு எதிராக உறுதிமொழியை எடுக்க வைத்தவர் கலைஞர். இந்தியாவிலேயே தமிழ்நாடு மற்றும் ஜனதா கட்சி ஆட்சி செய்த குஜராத் மாநிலம் தான் அவசர நிலையை எதிர்த்தது. இதுகுறித்த வரலாற்றுக் குறிப்புகளை இன்றைய ’இந்து ’ஆங்கில நாளேடு வெளியிட்டு இருக்கிறது. அதிமுகவை தொடங்கியிருந்த எம்.ஜி.ஆர் இந்த அவசரநிலை பிரகடனத்தை வரவேற்றார்’ சர்வாதிகாரியாக மாறிய இந்திரா காந்தி ஆட்சியின் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருப்போம் என்று அறிக்கை வெளியிட்டார்.*

*அப்போது ஆளுநராக இருந்தவர் கே.கே.ஷா ஆளுநர் ஆட்சியின் கீழ் தமிழ்நாடு கொண்டுவரப்பட்டது. ஆளுநருக்கு ஆலோசகராக மத்திய அமைச்சக அதிகாரிகளான இரண்டு பார்ப்பனர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஒருவர் பெயர் தவே; மற்றொருவர் பெயர் ஆர்.வி.சுப்பிரமணியம் ; இவர் தமிழ்நாட்டு பார்ப்பனர். அரசியல் கட்சி நடவடிக்கைகளை முற்றாக முடக்கி எழுத்துரிமை, பேச்சுரிமை இல்லாத அந்த காலகட்டத்தை பயன்படுத்தி தமிழ்நாடு அரசு அமைப்பை பார்ப்பனமயமாக்க இந்த அதிகாரிகள் தீவிரமாக செயல்பட்டனர். அதிலும் குறிப்பாக ஆர். வி. சுப்பிரமணியம் தமிழ்நாட்டின் முழு அதிகாரத்தையும் கையில் எடுத்துக் கொண்டார். ஆளுநரின் ஆலோசகராக வந்தவர் அடிக்கடி காஞ்சிமடம் சென்று சங்கராச்சாரியின் ஆலோசனைகளை பெற்று நிர்வாகத்தை நடத்தினார். கலைஞர் ஆட்சியில் நிர்வாக அதிகாரிகளாக இருந்தவர்கள் பந்தாடப்பட்டனர். 14-அரசுத்துறை செயலாளர்களில் 12-பேர் பார்ப்பனர்களாக நியமிக்கப்பட்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களில் 80 சதவீதம் பேர் பார்ப்பனர்களாக பதவியேற்றனர்.*

*இப்போது மோடி ஆட்சியின் மாநில உரிமை பறிப்புகளுக்கு எதிராக தமிழ்நாடு முதலமைச்சர் எப்படி உரத்தகுரல் கொடுக்கிறாரோ அதேபோல் அன்றைக்கு கடுமையான ஒடுக்குமுறை தலை விரித்தாடிய காலத்தில் கலைஞர் அவசர நிலைக்கு எதிராக மாநில உரிமைக்கு குரல் கொடுத்தார் அதற்காகவே ஆட்சியை இழந்தார். அவசர நிலை பிறப்பிக்கப்பட்ட பிறகு 7-மாதங்கள் நடந்த கலைஞர் ஆட்சி அவசரநிலை அறிவிப்புக்கு எதிராக செயல்படுவதாகவும் பிரிவினை சக்திகளுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் ஆளுநரின் அறிக்கை கூறியது. தமிழ்நாடு பார்ப்பனமயமாகி வருகிறது என்ற அதிருப்தி காங்கிரஸ் வட்டாரங்களிலேயே எழுந்தது குறிப்பாக மாநிலங்களவை துணைத் தலைவராக இருந்த முராஹரி பலமுறை தமிழ்நாட்டிற்கு வருகை தந்து பார்ப்பன ஆட்சியை நேரில்கண்டு கொதிப்படைந்து இருக்கிறார். இதை அமெரிக்க தூதரக அதிகாரிகளிடம் வெளிப்படுத்தினார். 2013-ல் அம்பலத்துக்கு வந்த அமெரிக்காவின் ’விக்கிலீக்’ ரகசிய ஆவணங்களில் இந்த தகவல்கள் பதிவாகி இருப்பதை இந்து ஏடு சுட்டிக் காட்டி இருக்கிறது.*

*அன்றைய காங்கிரஸ் கட்சி தலைவராக இருந்த டி.கே.பரூவாவும் உள்துறை இணை அமைச்சராக இருந்த ஓம்.மேத்தா-வும் இதற்கு அதிருப்தி தெரிவித்தனர் என்றும், இந்த பார்ப்பன அதிகாரிகளை நியமித்து தவறு செய்து விட்டோம் என்றும், ஒப்புக் கொண்டுள்ளனர் என்ற செய்தியையும் விக்கிலீக்கை மேற்கோள் காட்டி ’இந்து’ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அதிகாரத்தின் உச்சியில் பவனி வந்தது. காங்கிரஸ் கட்சிக்குள் மூப்பனார் அணி ஒன்றாகவும், பழ.நெடுமாறன் அணி ஒன்றாகவும் இரு துருவங்களாக செயல்பட்டன. பழ நெடுமாறன் அவசர நிலையை தீவிரமாக ஆதரித்தாலும் ஆர்.வி சுப்பிரமணியத்தின் பார்ப்பனமயமாக்கலை எதிர்த்து அவரிடமே புகார் செய்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும். இந்த செய்தியை அப்போதே ’விடுதலை’ நாளேட்டில் பதிவு செய்திருக்கிறோம். அவசரநிலை காலம் என்றாலும் அமித் ஷா ஆட்சிக் காலம் என்றாலும் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்துக்கே பயன்படுத்துவார்கள் இதுதான் வரலாறு. கடப்பாரை தூக்கும் கழிசடைகளுக்கு இது புரியாது!*

**விடுதலை இராசேந்திரன்**
***முகநூல் பதிவு,01.02.2025.***

# கழக ஏட்டுக்கு நன்கொடை

*வேலூர் மாவட்டக் கழகம் சார்பில் தோழர் சிவா(வேலூர் மாவட்டத் தலைவர்) 20 பெரியார் முழக்க சந்தாவுக்கான தொகை ரூ.6000 பெரியார் முழக்க வங்கிக் கணக்கிற்கு அனுப்பியுள்ளார்.*

*கழகத் தோழர் இரண்யா ரூ.2000 கழக ஏட்டுக்கு மாதம் மாதம் நன்கொடை வழங்கி வருகிறார். பிப்ரவரி மாத நன்கொடை ரூ.2000 தந்துள்ளார்.*

***நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்)***

# தமிழ்நாடு மாணவர் கழகம் கண்டனம்

*இளங்கலை ஃபிசியோதெரபி மற்றும் இளங்கலை ஆக்குபேஷனல் தெரபி படிப்புகளுக்கும் நீட் (NEET) நுழைவுத் தேர்வு. நீட் நுழைவுத் தேர்வு எனும் அநீதியை மருத்துவப் படிப்புகளில் அரங்கேற்றி வருவதோடு தற்போது இளங்கலை ஃபிசியோதெரபி மற்றும் இளங்கலை ஆக்குபேஷனல் தெரபி படிப்புகளுக்கும் நீட்டைக் கட்டாயமாக்கி அறிவித்துள்ளது தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையம் (NCAHP).*

*தமிழ்நாட்டை ஆண்ட அ.இ.அ.தி.மு.க-வும் ஆளுகின்ற தி.மு.க-வும் பலமுறை நீட் தேர்விற்கு எதிராகவும் தமிழ்நாட்டிற்கு நீட்டிலிருந்து விலக்கு கேட்டும் சட்டமன்றத்தில் மசோதாக்களை நிறைவேற்றி ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பிருந்தார்கள். அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல் தற்போது துணை மருத்துப் படிப்புகளுக்கும் நீட் என்பது "தமிழ்நாடு தமிழருக்கே!" என்கிற முழக்கத்தை ஓங்கி ஒலிக்க வேண்டிய தேவையை உருவாக்குகிறது! ஒவ்வொரு வருடமும் நீட் நுழைவுத் தேர்வில் நடைபெறும் முறைகேடுகள் அதிகரித்து வரும் சூழலில் NCAHP-ன் இந்த நடவடிக்கை பச்சை அயோக்கியத்தனமே. வேறெந்த மாநிலத்தை விடவும் தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பிலும், மருத்துவம் மற்றும் துணை மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கான வசதிகளிலும் தமிழ்நாடு தனித்துவம் பொருந்தியது. தமிழ்நாட்டின் துணை மருத்துவப் படிப்பை சூறையாடும் NCAHP-ன் இந்தப் போக்கை தமிழ்நாடு மாணவர் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.*

**– பேரன்பு,**
**சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,**
**தமிழ்நாடு மாணவர் கழகம்.**
***31.01.2026***

# பெரியார் பற்றிய செய்திகள் திட்டமிட்டு மறைக்கப்பட்டதா! ஜீவாவின் வாழ்க்கை வரலாறுகளில் விடுபட்டது எப்படி?

**ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் 12**

-கொளத்தூர் மணி

காந்தி ஆசிரமத் தலைவர் கும்பலிங்கம் அவர்களுடைய அறிக்கை கூறுகிறது, அந்த ஆசிரமம் 11.2.1926 அன்று தொடங்கப்பட்டது என்று. இந்த செய்தியைத் தாங்கி இருக்கிற அதே 'குடிஅரசு' இதழின் 5ஆம் பக்கத்தில் மற்றொரு செய்தியும் பதிவாகி இருக்கிறது. அச்செய்தி "ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அவர்கள் 6.4.1926-ஆம் தேதி மாலை 5 மணிக்கு ஸ்ரீமான்கள் பிச்சா சுப்பிரமணிய செட்டியார், ராய. சொக்கலிங்கம் செட்டியார், வ.ராமசாமி அய்யங்கார் முதலியவர்களுடன் காரைக்குடியில் இருந்து காலை 9 மணிக்கு வந்ததும், வாத்திய கோஷத்துடன் ஆதிதிராவிடக் குழந்தைகளுக்காக ஸ்ரீமான் கும்பலிங்கம் பிள்ளை பார்வையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காந்தி ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்" என்ற செய்தியை நாம் பார்க்கிறோம்.

## பெரியாரை தவிர்த்த ஜீவா

ஏற்கனவே 7.4.1926 நாளிட்ட 'குமரன்' இதழில் வந்திருந்த செய்தியை நாம் பார்த்திருக்கிறோம். அந்த செய்தியில் இதே நாளில் "6.4.1926 அன்று பெரியார் 10 மணிக்கு சிராவயல் வந்து காந்தி கிணற்றைத் திறந்து வைத்ததும், அதேபோல மாலை 6 மணிக்கு நடந்த பொதுக் கூட்டத்தில் பெரியார் தலைமை வகித்து சில நிமிடங்கள் முகவுரை கூறியவுடன், எழுத்தாளர் வ.ரா. அவர்கள் 'கடமையும் உரிமையும்' என்ற தலைப்பிலும், பிச்சப்பா சுப்ரமணியம் செட்டியார் அவர்கள் 'சுதந்திரம்' என்ற தலைப்பிலும், ராய.சொக்கலிங்கம் அவர்கள் 'வகுப்பு' என்ற தலைப்பிலும் உரையாற்றிய செய்தியும், மதுரை ஊமைபிள்ளை என்கிற பள்ளிக்கூட ஆசிரியர் தமது பள்ளிக்கூடத்தைப் பற்றி சில வார்த்தைகள் கூறியதாகவும் அவ்விதழில் காணப்படுகிறது. ( ஆனால் கும்பலிங்கம் பிள்ளை என்ற ஏற்கனவே சேரன்மாதேவி குருகுலத்திலும் ஆசியராகப் பணியாற்றி, இப்போது ஆசிரமத் தலைவராகவும் இருக்கிற கும்பலிங்கம் என்ற ஆசிரியர், மதுரை ஊமைப்பிள்ளை பள்ளிக்கூட ஆசிரியர் பற்றி மட்டும்தான் குறிப்புகள் இருக்கின்றனவே தவிர 'ஜீவானந்தம்' என்ற ஒரு ஆசிரியர் இருந்ததற்கான பதிவைக் கூட காண முடியவில்லை)

அதைத் தொடர்ந்து பெரியார் அரசியல், ஆசாரத் திருத்தம், தற்கால மதவாதிகளின் போக்கு ஆகியவற்றைப் பற்றி எளிய நடையில் இரண்டேகால் மணி நேரம் ஒவ்வொருவருடைய உள்ளமும் உருகுமாறு உண்மை உணர்வும், பொருட்பொலிவும் உள்ள வசனத்தில் உரையாற்றியதாக" அவ்வேடு சொல்லுகிறது. ஆனால் தோழர் ஜீவா அவர்களால் நேரடியாய் சொல்லப்பட்டு வரலாறு எழுதிய தோழர் இஸ்மத் பாஷா, தோழர் பாலதண்டாயுதம் ஆகியோரைப் போன்றே ஜீவா வாழ்க்கை வரலாறுகள் எல்லாம் வ.ரா. அவர்கள் வருகை பற்றியும், அப்போது ஜீவா அவர்கள் 'நாடும் இளைஞரும்' என்ற தலைப்பில் தனித்தமிழ் நடையில் உரையாற்றியது பற்றியும், அவர் வ.ரா. பிரமித்துப்போனது பற்றியும் பதிவு செய்திருக்கிறார்கள். அப்படி ஒரு பதிவினை 'குமரன்' ஏட்டிலும் நம்மால் காண முடியவில்லை; 'குடிஅரசு' இதழிலும் அவ்வாறான செய்திகளைப் பார்க்க முடியவில்லை.

> **பெரியார் 16.7.1927 அன்று காரைக்குடி வந்தபோது சிராவயல் ஆசிரமத்தார்கள் வருகை தந்திருக்கிறார்கள்; சிராவயலில் இருந்து மக்கள் வருகை தந்திருக்கிறார்கள்; இந்த செய்திகள் ஒருவேளை தோழர் ஜீவா அவர்களுக்கு தெரிந்திருக்காதோ, என்னவோ அல்லது தெரிந்திருந்தும் அவர் வாழ்க்கை வரலாறு எழுதிய தன் தோழர்களிடம் அதைச் சொல்லவில்லையோ தெரியவில்லை; ஆனால் பெரியார் வருகை பற்றிய எந்தப் பதிவுகளும் ஜீவாவின் வாழ்க்கை வரலாறுகளில் இல்லை.**

அடுத்ததாக குடிஅரசு இதழின் 24.7.1927 நாளிட்ட இதழில் 5-ஆம் பக்கத்தில் 'காரைக்குடியில் திரு.நாயக்கர்' என்ற தலைப்பில் ஒரு பதிவு காணப்படுகிறது. அதில் 16.7.1927 அன்று பெரியார் காரைக்குடிக்கு சென்றது குறித்தும், பல இடங்களில் வரவேற்புகள் நிகழ்ந்தது பற்றியும் பதிவுகள் காணப்படுகின்றன. "அந்நிகழ்வில் திரு. நாயக்கர் அவர்கள் பெரிய கரகோஷத்தினுடன் எழுந்து மேடை மீது இவர்ந்து (ஏறி) மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்து நின்ற மக்களை நோக்கி சுமார் 2 மணி நேரம் வரை வெகு உருக்கமாக, நகைச்சுவையுடன் அன்பு உணர்வும், அற உணர்வும் பொங்கித் ததும்ப தேன்மாரி என சொன்மாரி பொழிந்தனர். அது பின்னர் வரும்" என்ற செய்தியும் காணப்படுகிறது.

அதோடு அந்த ஊர்வல நிகழ்வில் சிராவயல் காந்தி ஆசிரமத்தாரும், பிற அன்பர்களும் தேசிய கீதம் பாடிக்கொண்டு வந்தனர் என்ற செய்தியும், கூடி இருந்த மக்கள் குறித்து எழுதுகிறபோது சிராவயல் முதலிய ஊர்களில் இருந்து ஏராளமான அன்பர்கள் வந்திருந்தனர் என்றும், கூட்டமானது ஆயிரம் இதழ்களான தாமரை மலர் போல மகிழ்ச்சி கடலென நிலவியது என்றும் காணப்படுகிறது. ஆக பெரியார் 16.7.1927 அன்று காரைக்குடி வந்தபோது சிராவயல் ஆசிரமத்தார்கள் வருகை தந்திருக்கிறார்கள்; சிராவயலில் இருந்து மக்கள் வருகை தந்திருக்கிறார்கள்; இந்த செய்திகள் ஒருவேளை தோழர் ஜீவா அவர்களுக்கு தெரிந்திருக்காதோ, என்னவோ அல்லது தெரிந்திருந்தும் அவர் வாழ்க்கை வரலாறு எழுதிய தன் தோழர்களிடம் அதைச் சொல்லவில்லையோ தெரியவில்லை ; ஆனால் பெரியார் வருகை பற்றிய எந்தப் பதிவுகளும் ஜீவாவின் வாழ்க்கை வரலாறுகளில் இல்லை.

## தனிக்கிணறு கூடாது

அதுமட்டுமின்றி 31.7.1927 குடி அரசு இதழின் 3,4ஆம் பக்கங்களில் 20.7.1927 அன்று சிராவயல் ஊருக்கே இரண்டாவது முறையாக பெரியார் சென்றிருக்கிறார். அந்தச் செய்தியின்படி காந்தி ஆசிரமத்தாரும், ஆதிதிராவிட வாலிபர் சங்கத்தாரும் தனித்தனியே இரண்டு வரவேற்புப் பத்திரம் வாசித்து கொடுத்த சமயம் திரு.நாயக்கர் செய்த 'சொற்பொழிவின் தத்துவம்' என்ற தலைப்பிட்டு அவருடைய உரையை வெளியிட்டு இருக்கிறார்கள். அதில் "சென்ற வருடம் இதே ஊருக்கு வந்திருந்த சமயம் காந்தி கிணறு என்ற ஒரு கிணற்றை ஆதிதிராவிடர்களுக்கு மாத்திரம் என்று வெட்டி அதைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்ட போது நான் இதே அபிப்பிராயத்தைத் தான் தெரிவித்தேன்.

காரணம் என்ன என்றால் அவர்கள் படிக்கக்கூடாது என்பதற்காகவாவது அவர்களுக்கு தனி சௌகரியம் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாது என்பதற்காகவாவது அல்லவே அல்ல. இம்மாதிரி ஒரு வகுப்பாருக்குத் தனி சௌகரியம் ஏற்படுத்திக் கொடுத்து, நம்மோடு கலந்து வாழும்படி செய்யாததன் பயனாய் நிரந்தரமாய் இவர்கள் இழிந்தவர்கள் என்பதை நிலை நிறுத்தி அவர்களை மீளவிடாமல் செய்து வருகின்றோம் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்கு கொண்டு வருவதற்கும் சமத்துவம் அடையச் செய்வதற்கும், பாடுபடும் பெரியோர்கள் அந்த சமூகத்திற்கு என்று தனியாக கிணறும், கோவிலும், பள்ளிக்கூடமும் வெட்டவும், கட்டவும், ஏற்படுத்தவும் நினைப்பதானது அச்சமூகத்தாரை நிரந்தரமாய் இழிவுபடுத்தி வைப்பதற்கு ஆதாரங்களையும், அவசியங்களையும், கற்சிலைகளையும், சிலாசனங்களையும் உண்டாக்கி வைத்துள்ளோரே ஆவார்கள்" என்றும் பேசியிருக்கிறார்.

## இதுதான் பெரிய மனிதரின் பண்பா?

ஆக ஒரு முறை பெரியாரோடு உடன் வந்திருந்து சிறிது நேரம் உரையாற்றிய எழுத்தாளர் வ.ரா. அவர்களைப் பற்றி, அவர்கள் உரையாற்றியதைப் பற்றிக் குறிப்பிடாமல் அவருக்கு முன்னால் ஜீவா உரையாற்றியது பற்றி பல்வேறு வகையில் முலாம் பூசி சொல்ல முடிந்தவரால், ஏன் இரண்டு முறை அதே ஊருக்கு, அதே காந்தி ஆசிரமத்திற்கு வந்திருந்த பெரியாரையும், அதுவும் பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்ட சிராவயல் ஆசிரமத்திற்கு ஏப்ரல் மாதத்திலேயே, அந்த ஆசிரமம் தொடங்கப்பட்ட இரண்டாவது மாதத்திலேயே முதல் முறையும், அதற்கு ஓராண்டு கழித்து இரண்டாம் முறையும் வந்திருந்த பெரியாரைப் பற்றி, அவரது காரைக்குடி நிகழ்வின்போது ஊர்வலத்திலும் கலந்து கொண்டு 'தேசியப் பாடல்களைப் பாடிய சிராவயல் காந்தி ஆசிரமத்தார்' என்று குறிப்புகள் இருக்கிற நிலையிலும், அதுகுறித்துப் பேசாமலே விடுவது என்பது பெரிய மனிதராகப் போற்றப்படும் ஒருவரின் பண்பாகுமா என்ற கேள்வி எவர் ஒருவருக்கும் எழத்தானே செய்யும்!

'குடி அரசு' ஏட்டில் காணப்படுகிற பதிவின்படி பெரியாரை ஜீவா சந்தித்த நிகழ்வு 9.3.1930இல் நிகழ்ந்துள்ளது. "தென்மாப்பட்டில் 'வைக்கம்வீரர் வாசக சாலை'யின் ஆண்டு விழா கூட்டத்திற்கு தோழர்கள் சௌந்தரபாண்டியன், எஸ் ராமநாதன், கைவல்ய சுவாமிகள், பட்டுக்கோட்டை தண்டபாணி, திருச்சி விஸ்வநாதம் ஆகியோருடன் செல்லும் வழியில் நாச்சியார்புரத்தில் 'உண்மை விளக்க நிலையத்'தாரால் பெரியார் அவர்கள் வரவேற்கப்பட்டு வாத்தியங்களுடன் அங்குள்ள ஆதிதிராவிடர் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்" என்றும், "அங்கு ஊ.பு.அ சௌந்தர பாண்டியன் தலைமையில் நிலையத்தார் சார்பாக உபசாரப் பத்திரம் (வரவேற்பிதழ்) திரு. ஜீவானந்தம் அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது" என்றும் காணப்படுகிறது. அதற்குப் பின்னர் ஆத்மா ராம் அவர்கள் திருபாண்டியன் முதலியோரை வரவேற்று உரையாற்றியுள்ளார். ( 'நாச்சியார்புரம்' என்ற தலைப்பில் இவ்வூரில் ஆயுர்வேத வைத்தியசாலை ஆத்மாராம் சுவாமிகளால் நகரத்தாரின் பொருள் உதவியின் மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இவ் வைத்தியசாலையில் ஏழை மக்களுக்கு உபகாரம் உண்டு' என்ற செய்தி 7.6.1926 நாளிட்ட 'குமரன்' இதழில் நான்காம் பக்கத்தில் வெளியாகி உள்ளது)

அதன்பின்னர் தென்மாப்பட்டு சென்று அங்கு செயல்பட்டு வரும் வைக்கம்வீரர் வாசகசாலையின் ஆண்டு விழாவில் பெரியாரும் தோழர்களும் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர். இந்த இடத்தில் வேறு சில செய்திகளைப் பார்ப்போம். ஜீவாவின் வாழ்க்கை வரலாறு 'பொதுவுடைமையின் முகவரி ஜீவா' என்ற தலைப்பில் 2008ஆம் ஆண்டில் தோழர் பொன்னீலன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலுக்கு முன்னுரை வழங்கிய முனைவர்.தே.வேலப்பன் அவர்கள் "சாமுவேல் ஜான்சன் அவர்களுக்கு ஒரு பாஸ்வெல்; திரிசிரபுரம் (பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம்) பிள்ளைக்கு ஒரு உ.வே.சா; ஜீவாவுக்கு ஒரு பொன்னீலன்" என்று பாராட்டப்பட்ட நூல் அது. அந்நூலின் 44 வது பக்கத்தில் உள்ள செய்திகளை பார்ப்போம்.

"நீண்ட காலம் சிராவயலில் தாக்குப் பிடிக்க முடியவில்லை ஜீவாவுக்கு. காந்தியடிகளைக் கடவுளாக மதித்தவர் அவர். ஆயினும் வர்ணாசிரம தர்மக் கோட்பாட்டில் காந்தியடிகளுக்கு இருந்த பிடிப்பு ஜீவாவுக்குக் கடுமையான மன உறுத்தலைத் தந்தது. வர்ணாசிரமக் கொடுமைக்கு எதிராக மேலும் மேலும் தீவிரம் காட்டுகிறார் அவர். இந்தப் போக்கு சிராவயல் ஆசிரமம் நடத்துபவர்களுக்கும் ஜீவாவுக்கும் இடையில் முரண்பாடுகளை வளர்த்தது. எதிலும் சமரசம் செய்து கொள்ளாதவரான ஜீவா அங்கிருந்து வெளியேறி பக்கத்து 'நாச்சியார்புரம்' வருகிறார். அங்கு ஒரு ஆசிரமம் அமைத்து சிறிது காலம் அடித்தட்டு மக்களுக்கு கல்வித் தொண்டாற்றுகிறார். அங்கும் தன் பணியைத் தொடர முடியாமல் கடைசியில் சிவகங்கை வருகிறார் அவர். அங்கு அக்காலத்தில் சுயமரியாதைச் சுடரொளியாகத் திகழ்ந்த எஸ். ராமச்சந்திரன் சேர்வை அவர்களுடன் சேர்ந்து சுயமரியாதைத் தொண்டாற்றத் தொடங்குகிறார்"

"ராமச்சந்திரன் சேர்வை சிவகங்கை மன்னரின் உறவினர். சிவகங்கை சமஸ்தான வழக்கறிஞர். பெரியாரின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவர். ஜீவாவை சிவகங்கையில் தங்கவைத்த அவர், சுயமரியாதைப் பிரச்சாரம் செய்ய அவருக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கிறார்" "சிவகங்கையில் ஜீவாவின் முதன்மையான பணி மாலை நேரப் பள்ளிகளைப் பார்வையிடுதல். ராமச்சந்திரனின் ஏற்பாட்டில் சிவகங்கையைச் சுற்றி பல இடங்களில் மாலை நேரப் பள்ளிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு பள்ளிக்கும் இரண்டு இரண்டு ஆசிரியர்கள், அவர்களுக்குத் தேவையான விளக்குகள், எழுது பொருட்கள், படிக்க வசதியான இடங்கள் முதலியனவற்றை ராமச்சந்திரன் சேர்வை ஏற்பாடு செய்தார். இந்த பள்ளிகளில் எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்பட்டதோடு பகுத்தறிவு கருத்துக்களும் போதிக்கப்பட்டன".

## தென்மாப்பட்டு நிகழ்ச்சியின் உண்மை

46 ஆம் பக்கத்தில் "இந்தச் சூழலில் தான் 'தென்மாப்பட்டு' என்னும் ஊரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பெரியாரும் ஜீவாவும் ஒரே மேடையில் பேசுகிறார்கள். ஜீவாவின் பேச்சு பெரியாரைப் பெரிதும் கவர்ந்தது. கூட்டம் முடிந்ததும் பெரியார் ஜீவாவிடம் "நீங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க" என்று கேட்டார். ஆசிரியராகப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் என்றார் ஜீவா.

தொடர்ச்சி 4ம் பக்கத்தில்

# யுஜிசி விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டும்!

ஆனால் "ஜாதிப் பாகுபாடு" என்பது எஸ்.சி, எஸ்.டி மற்றும் ஓபிசிபிரிவினருக்கு எதிரான பாகுபாடுகளை மட்டுமே குறிக்கும் வகையில் இருப்பதாக உயர்ஜாதியினர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை வி.பி. சிங் அமல்படுத்தியபோது வெளிப்படுத்திய கண்மூடித்தனமான எதிர்ப்பை இதற்கும் வெளிக்காட்டியுள்ளனர். உயர் ஜாதியினரே ஒடுக்குமுறையாளர்கள் என்று இந்த விதிகள் மறைமுகமாகக் கருதுகின்றன, இதனால் அவர்கள் துன்புறுத்தப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கின்றனர். பொய்யான புகார்களுக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் இதில் இல்லை. இவற்றில் ஏதாவது அடிப்படை நியாயமோ, நேர்மையோ இருக்கிறதா? ஆனால் பா.ஜ.க. அரசு கொண்டு வந்த இந்த விதிகளுக்கு பா.ஜ.கவிலேயே கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

குறிப்பாக, உத்தரப் பிரதேசத்தில் ரே பரேலி மாவட்டம் சலோனில் பாஜக கிசான் மோர்ச்சாவின் மாவட்டத் தலைவரான ஷியாம் சுந்தர் திரிபாதி, எதிர்ப்பின் காரணமாக ராஜினாமா செய்த தலைவர்களில் ஒருவர். ஊடகத்திற்கு பேட்டி அளித்துள்ள அவர், "விதிகள் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும்" என்றார்.

"இன்று இல்லையென்றாலும் நாளை கல்லூரிகளில் படிக்கும் எங்கள் மகன்களும் மகள்களும் தவறான நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும். யாராவது காதலைச் சொல்லி அவர்கள் மறுத்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படலாம். SC, ST, OBC அல்லது சவர்ணர்கள் என யாராக இருந்தாலும் விதிகள் சமமாக இருக்க வேண்டும். பொதுப் பிரிவினர் பாகுபாட்டை எதிர்கொள்வதில்லையா? எண்ணிக்கையில் அதிகமாக இருப்பவர்கள் குறைவாக இருப்பவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவார்கள். சவர்ணர்களுக்கு எதிராகப் பாகுபாடு நடக்காதா?" என்று கூறி அவர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். அம்மாநிலத்தில் மட்டும் பாஜகவில் பத்துக்கும் மேற்பட்டோர் பதவியை ராஜினாமா செய்துள்ளனர்.

"இந்த விதிகள் தெளிவற்றவை, தவறாகப் பயன்படுத்தக்கூடியவை மற்றும் நாட்டைப் பிளவுபடுத்தக்கூடியவை" என்று கூறி உயர் ஜாதி இந்துக்களின் எண்ணவோட்டத்தை தீர்ப்பாக எழுதி, உச்சநீதிமன்றம் தற்போது யுஜிசியின் இந்த புதிய விதிகளுக்குத் தடை விதித்துள்ளது. ஒன்றிய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, அரசின் UGC விதிகளுக்கு ஆதரவாக எந்த வாதத்தையும் முன்வைக்கவில்லை. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக தனிப்பெரும்பான்மை பெற முடியாமல் போனதற்கு முக்கியக் காரணமே பிற்படுத்தப்பட்ட மக்களின் வாக்குகள் சரிந்ததுதான் என்று கூறப்பட்டது. அதைச்சரி செய்யும் விதமாக பாஜக இம்முயற்சியில் இறங்கியதா என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. எனினும் பார்ப்பனிய - உயர் ஜாதியினரை பகைத்துக்கொள்ள விரும்பாமல் பாஜக தலைமை உடனடியாக இம்முயற்சியில் இருந்து பின்வாங்கியிருக்கிறது.

ஆனால் யுஜிசியின் இந்த புதிய விதிகள் இன்னும் தீவிரமாக செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது என்பதே கள எதார்த்தம். நாடாளுமன்றக் குழுவிற்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் UGC சமர்ப்பித்த சொந்தத் தரவுகளின்படி, பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஜாதி ரீதியான பாகுபாடு புகார்கள் 2019-20 முதல் 2023-24 வரை 118.4% அதிகரித்துள்ளன. 2021-ல் மக்களவையில் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அளித்த பதிலில், 2014 முதல் 2021 வரை உயர்கல்வி நிறுவனங்களில் தற்கொலை செய்துகொண்ட 122 மாணவர்களில் 68 பேர் (55%) பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் (SC-24, ST-3, OBC-41). ஆகஸ்ட் 2022 தரவுகளின்படி, 45 மத்தியப் பல்கலைக்கழகங்களில் SC பிரிவைச் சேர்ந்த ஒருவர் மற்றும் ST பிரிவைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே துணைவேந்தர்களாக இருந்தனர். இடஒதுக்கீடு இருந்தும், உயர்கல்வி நிறுவனங்களில் 80% OBC, 64% தலித் மற்றும் 83% பழங்குடியினப் பேராசிரியப் பணியிடங்கள் காலியாக உள்ளன. 2006-ல் அப்போதைய UGC தலைவர் பேராசிரியர் சுக்தேவ் தோரட் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, எய்ம்ஸ் (AIIMS) மருத்துவக் கல்லூரியில் ஆய்வு நடத்தியது. அதில், SC/ST மாணவர்கள் கற்பித்தலில் மட்டுமல்லாமல், மதிப்பீடு, தேர்வு, விடுதிகள் மற்றும் உணவகங்களில் சமூகப் புறக்கணிப்பு, மற்றும் சாதி ரீதியான ராகிங் ஆகியவற்றால் பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டது.

எனவே உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டியது மிக அவசியமானது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

# குன்னத்தூரில் ஜாதி வெறிச்செயல் கழகம் எதிர்வினை!



திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் கருப்பண நாடார் பள்ளியில் 30-01-2026 அன்று சக மாணவர்களால் 8-ம் வகுப்பு பட்டியலின வகுப்பைச் சார்ந்த ரக்சத் என்னும் மாணவன் தீயில் தூக்கி வீசப்பட்ட ஜாதி வெறிச் சம்பவம் நடந்துள்ளது.

தீக்காயங்களால் பாதிக்கப்பட்ட மாணவனை பெருந்துறை அரசு மருத்துவமனையில் சேர்த்திருந்தனர். உடனே செய்தி அறிந்த திராவிடர் விடுதலைக் கழக வெளியீட்டுச் செயலாளர் இராமஇளங்கோவன் அவர்களுடைய தலைமையில் முகில் ராசு (திருப்பூர் மாவட்டத் தலைவர்), செல்வக்குமார் (கோபி மாவட்டச் செயலாளர்), மாரிமுத்து (திருப்பூர் மாநகர துணை தலைவர்), கோபி அருளானந்தம், ஈசுவரமூர்த்தி ஆகியோர் பாதிக்கப்பட்ட மாணவனைச் சந்திக்கச் சென்றனர்.

பாதிக்கப்பட்ட மாணவனுக்கு ஆறுதல் கூறியதோடு அவனுடைய பெற்றோர்களிடமும் மற்றும் மாணவனிடமும் தோழர் இராம.இளங்கோவன் அவர்கள் நடந்த உண்மை சம்பவங்களைக் கேட்டு அறிந்தார்.

பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய லெனினிய அமைப்புகளை ஒன்றிணைத்து இச்சம்பவத்திற்குக் காரணமான பள்ளி நிர்வாகத்தையும் மற்றும் தொடர்ந்து பள்ளியில் ஜாதிய பாகுபாடுகளுக்கு எதிராக புகாரளித்தும் கண்டும் காணாமல் இருந்த ஆசிரியர்களையும் கண்டிக்கும் வகையில் மருத்துவமனை முன்பு ஆர்ப்பாட்ட கோசங்களை எழுப்பி கண்டனம் தெரிவித்தனர். சூழ்நிலை கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடி நடவடிக்கை எடுக்கும் விதமாக உரிய சிகிச்சை அளிப்பதற்காக பாதிக்கப்பட்ட மாணவனை கோவை (கே.எம்.சி.எச்) மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இராம.இளங்கோவன் செய்தியாளர்களிடம் கூறுகையில்:- பாதிக்கப்பட்ட பட்டியலின மாணவன் ரக்சத் மீது தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் ஜாதியின் பெயரில் இயங்கக்கூடிய அனைத்து கல்வி நிறுவனங்களையும் தடை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பிப்ரவரி-1,2026 ஞாயிற்றுக்கிழமை புகார் மனு அளிக்க தோழர்கள் குன்னத்தூர் காவல் நிலையம் சென்றனர். மாணவனின் அனைத்து சிகிச்சை செலவுகளையும் பள்ளி நிர்வாகமே பார்த்துக் கொள்வதாக தகவல் வந்தது. நம்பியூர் ஒன்றியச் செயலாளர் ரமேசு மற்றும் அமைப்பாளர் மயில்சாமி உடனிருந்தனர். தோழமை இயக்கத்தினர் விசிக, ஆதித்தமிழர் பேரவைதீண்டாமை ஒழிப்பு முன்னணி, திராவிட தமிழர் கட்சி, புஇமு மற்றும் திருப்பூர், கோபி கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**3-ஆம் பக்க தொடர்ச்சி**

"பெரியவர்களுக்கே சொல்லிக் கொடுக்கக் வேண்டிய பாடங்கள் ஏராளம் இருக்கின்றன. சிறு பையன்களுக்கு அவசரம் இல்லை. போய் அந்த வேலையை விட்டு விட்டு என்னோடு வாருங்கள்" என்றார் பெரியார். பெரியாரின் முழுமையான தொண்டராக மாறுகிறார் ஜீவா.

இந்தக் கதையின் உண்மைத் தன்மையையும் பார்க்கலாம். இப்போது தென்மாப்பட்டில் வைக்கம் வீரர் வாசகசாலை ஆண்டுவிழாவின் செய்திகளைப் பார்ப்போம். அது 9.3.1930 'குடி அரசு' ஏட்டின் 4ஆம் பக்கத்தில் வெளியாகி உள்ளது. தென்மாப்பட்டில் எஸ். ராமநாதன் தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில் உரையாற்றியவர்களின் விவரங்களைப் பார்ப்போம். "ஜனாப் அப்துல் கரீம் அவர்களால் வரவேற்பு கீதம் பாடப்பட்டது. திரு. பெ. மாணிக்கவாசகம் அவர்களால் பார்ப்பனக் கொடுமைப் பாடல்கள் பாடப்பட்டன. பிறகு தலைவர் ராமநாதன் அவர்கள் முகவுரைப் பிரசங்கம் செய்தார்.

பிறகு திரு சௌந்தர பாண்டியன் அவர்கள் உபசாரப் பத்திரத்திற்குப் பதிலளிக்கும் முறையில் 'சுயமரியாதை சங்கம்' என்பது பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார். பிறகு திருச்சி விஸ்வநாதம் 'முன்னேற்றம்' என்பது பற்றியும், சோழவந்தான் திரு. பட்டாபிராம அய்யர் 'பெண்கள் விடுதலை' என்பது பற்றியும், திரு.ஈ.வெ. ராமசாமி 'நமது நாட்டின் இழிநிலைக்குக் காரணம்' என்பது பற்றியும், இளங்கோ என்னும் சிறுவன் 'சுயமரியாதை' என்பது பற்றியும், சிவகங்கை எஸ். ராமச்சந்திரன் 'தீண்டாமை' என்பது பற்றியும், சாத்தூர் சேர்மன் கந்தசாமி முதலியார் 'ஜாதி' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு புகைப்படம் எடுக்கப்பட்டது.

சுயமரியாதைப் பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன, நாடகங்கள் நடத்தப்பட்டு இருக்கின்றன. "அவர்களைப் பாராட்டி வைக்கம் வீரர் வாசக சாலையார் சார்பாக பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் வெள்ளி மெடல்கள் அளித்து நல்லுரை வழங்கினார். நடிக்கப்பட்ட நாடகம் சொற்பொழிவுகளை விட சிறந்த நலம் பயப்பது என்றும், இத்துறையில் நிலையத்தார் செய்த முயற்சி போற்றத்தக்கது என்றும், நாடகத்தைப் பல ஊர்களிலும், தமிழ்நாடு முற்றும் நடித்து மக்களுக்கு உணர்ச்சியூட்ட வேண்டும் என்றும், அது மற்ற நாடகங்களைப் போல கட்டுக் கதைகள் ரூபிக்காது, தினமும் நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளையே ரூபித்துக் காட்டுகின்றது என்றும் கூறி மேற்படி மாணவ மாணவிகளை ஈரோட்டு மகாநாட்டுக்கு வரும்படி அழைத்தார். பிறகு தலைவர் முடிவுரையானதும் தலைவருக்கும் உபநியாசர்களுக்கும் நன்றி கூறி கூட்டம் இரவு 9:00 மணிக்கு நிறைவேறிற்று".

**ஜீவா பேசியதாக பதிவு இல்லை**

இதுவே 'குடிஅரசு' ஏட்டில் தென்மாப்பட்டு நிகழ்ச்சி பற்றி பதிவாகி இருக்கிற செய்திகளாகும். நாச்சியார்புரம் 'உண்மை விளக்க நிலையத்தார்' பற்றிய செய்தியில் ஈ.வெ.ராமசாமியாருக்கு ஒரு உபசாரப் பத்திரம் நிலையத்தின் சார்பாக திரு. ஜீவானந்தம் அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது. திரு ஆத்மா ராம் அவர்களால் திரு பாண்டியன் முதலியோர்களை வரவேற்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. திரு. ராமசாமியார் பதில் அளித்ததும் பிள்ளைகளால் சுயமரியாதைப் பாடல்கள் பாடப்பட்டது. தலைவர் பாண்டியன் அவர்கள் முடிவாக ஆதிதிராவிடப் பிள்ளைகள் விஷயமாக தன்னாலும் தனது போர்டினாலும் (அப்போது அவர் இராமநாதபுரம் டிஸ்ட்ரிக் போர்டு தலைவர்) கூடிய உதவி புரிவதாக வாக்களித்தார். பிறகு பெருத்த ஜே கோஷத்துடன் எல்லோரும் தென்மாப்பட்டுக்கு புறப்பட்டார்கள்.

இந்த இடத்தில் மட்டும் தோழர் ஜீவானந்தம் அவர்களுடைய பெயர் செய்தியில் கொடுக்கப்பட்டிருக்கிறதே அன்றி தென்மாப்பட்டு பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாக எந்தப் பதிவும் அதில் இல்லை. இளங்கோ எனும் சிறுவன் 'சுயமரியாதை' என்பதைப் பற்றி பேசியதுகூட பதிவாகி இருக்கிறபோது, தோழர் ஜீவா பேசியிருந்தால் அது பதிவு செய்யப்பட்டு இருக்காதா? என்ற அய்யம் இயல்பாகவே எழத்தான் செய்கிறது; அய்யத்திற்கு எதிர்மறையான விடைதான் கிடைக்கிறது.

## பாஜக முயற்சி முறியடிப்பு!

திருவல்லிக்கேணி பகுதி வி.பி ராமன் சாலையில் பெரியார் சிந்தனைப் பலகை அருகில் பாஜகவினர் இரவு நேரத்தில் அனுமதியின்றி கொடிக்கம்பத்தை வைக்க முற்பட்டனர். செய்தியறிந்த கழகத் தோழர்கள் உடனடியாக காவல்துறையில் புகார் கொடுத்து கொடிக் கம்பத்தை எடுக்க வைத்தனர். ப. அருண் (இளைஞரணி அமைப்பாளர்), திருவல்லிக்கேணி பொறுப்பாளர்கள் சு.கோபிநாத், சே.ராஜேஷ், த.நா.சூர்யா மற்றும் கழகத் தோழர்கள் குமார், யாழினி ஆகியோர் உடன் இருந்தனர்.



## மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம்

சனவரி-25 அன்று நடராசன் - தாளமுத்து உள்ளிட்ட மொழிப்போர் தியாகிகளுக்கு மூலக்கொத்தலம் நினைவிடத்திற்கு பேரணியாகச் சென்று, திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது. சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர்கள் சேத்துப்பட்டு இராசேந்திரன், மா. வேழ வேந்தன், மாவட்ட அமைப்பாளர்கள் தட்சிணாமூர்த்தி, ம. கி. எட்வின் பிரபாகரன், மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வ. வேலு, இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், சுகுமார், இரண்யா, குறளரசி, துரை, சு. கோபிநாத் உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.

# திருப்பூரில் களைகட்டிய பொங்கல் விழா!

திருப்பூரில் கடந்த 10- ஆண்டுகளுக்கு மேலாக கழகத்தினர் தமிழர் திருநாள் பொங்கல்விழாவை பகுதி மக்கள் மற்றும் தோழமை சக்திகளின் ஆதரவுடன் கொண்டாடி வருகின்றனர். குறிப்பாக வீரபாண்டி பிரிவு பாரதி நகரில் கழகப் பொருளாளர் துரைசாமி , மாஸ்கோ நகரில் மாதவன் முன்னெடுப்பிலும் ஆரவாரத்துடன் கொண்டாடி வருகின்றனர்.

வீரபாண்டி பிரிவு: பாரதி நகர் பெரியார் படிப்பகம் பகுதியில் பொங்கல் விழா 15.01.26 அன்று காலை பொங்கல் வழங்குதலில் தொடங்கி, விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் வாழ்த்துரை வழங்குதல் பரிசு வழங்குதல் என மாலை வரை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. சரசுவதி (கழக மாநகர அமைப்பாளர்) பொங்கல் வழங்கி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகளை வீரபாண்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், ஆர்.குமார் (தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம்) தொடங்கி வைத்தார். விளையாட்டுப் போட்டிகளை ஆர். கணேசன், சி.லட்சுமணன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். மாலை வரை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

ராமசாமி (தெற்கு பகுதி அமைப்பாளர்) வரவேற்புரையாற்றினார். மேடை நிகழ்வுகளின் ஒருங்கிணைப்பு பணியை முத்து (மாநகர அமைப்பாளர்) அய்யப்பன் (வடக்கு ஒன்றிய அமைப்பாளர்) ஆகியோர் செய்தனர். சிறுவர், சிறுமியர் பங்கேற்ற திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, தமிழிசைப் பாடல்களுக்கான நடன நிகழ்ச்சி மிகுந்த உற்சாகத்துடனும் ஆரவாரத்துடனும் நடைபெற்றது.






நிர்மல் குமார் (கோவை மாநகரச் செயலாளர்), நம்பியூர் ரமேஷ், ஆசிரியர் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர்), பரிமளராசன் (சமூக வலைதளப் பொறுப்பாளர்), ரவீந்திர குமார் (53வது வார்டு தி.மு.க செயலாளர்), முகில் ராசு (திருப்பூர் மாவட்டத் தலைவர்), ராம. இளங்கோவன் (கழக வெளியீட்டுச் செயலாளர்), துரைசாமி (கழகப் பொருளாளர் ) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிறைவாக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர் சிறுமியர், பெண்கள், ஆண்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. கழகத் தோழர் ராசசிங்கம் நன்றியுரை ஆற்றினார். ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் நடராஜ், ஈஸ்வரமூர்த்தி, மயில்சாமி, அருள், சங்கீதா (மாவட்ட அமைப்பாளர்), தனபால் (மாநகரத் தலைவர்), மாதவன் (மாநகரச் செயலாளர்), இனியன், சுசீலா, சூலூர் தமிழ்ச்செல்வி (கோவை மாவட்ட அமைப்பாளர்), தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் ஈழமாறன், யாழிசை, மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

## மாஸ்கோ நகரில் மக்கள் பேராதரவுடன் நடைபெற்ற பொங்கல் விழா!

25.0126 ஞாயிறு அன்று காலை தொடங்கி மாலை வரை தமிழ் புத்தாண்டு பொங்கல் விழா திருப்பூர் மாஸ்கோ நகர் பெரியார் திடலில் கழகத்தின் மாநகரச் செயலாளர் மாதவன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மாஸ்கோ நகர் பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. பொங்கல் விளையாட்டு போட்டியை திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தொடங்கி வைத்தார். தனபால் (மாநகரத் தலைவர்), முத்து (மாநகர அமைப்பாளர்), தோழர்கள் சரசுவதி, சிரிஜா, தமிழ்நாடு மாணவர் கழக தோழர் கார்திக் ஆகியோரும் பொங்கல் வழங்கி சிறப்பித்தனர்.

சிறுவர், சிறுமியர், பெண்கள், ஆண்கள் பங்கேற்ற விளையாட்டுப் போட்டிகள் காலை முதல் மாலை வரை மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.




முகில் ராசு (மாவட்டத் தலைவர்) நிகழ்வுகளை நெறியாள்கை செய்தார். விளையாட்டுப் போட்டிகளை கழகத் தோழர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்தார்கள். பொங்கல் விழா நிகழ்வுகளில் வழக்கறிஞர் தமயந்தி, இளம் பரிதி, அபர்ணா ஆகியோரும், ஆர்.ஏ.சேகர் (28 வது வார்டு அதிமுக மாமன்ற உறுப்பினர்), அரிமா ஆர். நாகராஜ் (மதிமுக மாநகர மாவட்டச் செயலாளர்), பாரதி சுப்பராயன் (நவீன மனிதர்கள் குழு தலைவர்), அருண் (அமைப்புச் செயலாளர்), ஆரியாஸ் கண்ணன் (தவெக வார்டுச் செயலாளர்) ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். தமிழிசைப் பாடல்களுக்கு சிறுவர் சிறுமியரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. திருக்குறள் ஒப்புவித்தல், சிலம்பம் சுழற்றுதல், ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.

"காம்ரேட் கேங்ஸ்டா" இசைக்குழுவினரின் ராப் இசை பாடல்கள் பொதுமக்கள் சிறுவர் சிறுமியரின் பெரும் வரவேற்புடன் உற்சாகமாக நடைபெற்றது. துள்ளல் இசை நடனத்துடன் முற்போக்குக் கருத்துக்களை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் முயற்சியாக கடவுள் மறுப்பு ஜாதி மறுப்பு, கடவுள் பெயரால் கலவரம் செய்வது கூடாது போன்ற கருத்துகளை மிக அழகாக இக்குழுவினர் எடுத்துச் சென்றது அனைவரின் பாராட்டையும் வரவேற்பையும் பெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் வென்ற சிறுவர் சிறுமியருக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பரிசு வழங்கும் நிகழ்வில் மாரிமுத்து (மாநகரத் துணைத் தலைவர்) வரவேற்புரையாற்றினார்.

பொங்கல் விழா - தமிழ்ப் புத்தாண்டு குறித்து இணையதளப் பொறுப்பாளர் பரிமளராசன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினார்கள். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

போட்டிகளில் வென்ற சிறுவர் சிறுமியர்களுக்கு கழகத் தலைவர் மற்றும் கழகத்தின் முன்னணி பொறுப்பாளர்கள் தோழர்கள் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்கள். தோழர் இனியன் நன்றிகூறினார். இந்நிகழ்வில் கழகத்தின் மாவட்ட மாநகர ஒன்றிய பொறுப்பாளர்கள் தோழர்கள் பங்கேற்றார்கள்.

## சேலத்தில் திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை!



தை-2 திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது! சேலம் கிழக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 16.01.2026 காலை 10 மணி அளவில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு சேலம் பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள திருவள்ளுவர் உருவச் சிலைக்கு சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் தங்கதுரை, வெற்றிமுருகன், மாநகரத் தலைவர் பாலு, மாநகர செயலாளர் ஆனந்தி, மாநகரப் பொருளாளர் பிரபு, மாநகர அமைப்பாளர் தேவராஜ், செந்தில், FM பாலமுருகன், பரமேஷ், கோகுலகண்ணன், பாரப்பட்டி முருகேசன், நவராஜ், விக்ரம், அலாவுதீன், தமிழினி, நீலகண்டன், ஹரினி, சுதர்சன் ஆகிய கழகத் தோழர்கள் மற்றும் புரட்சிகர இளைஞர் முன்னணி வின்சென்ட் ஆகியோர் பங்கேற்றனர்.

## நாமக்கல்லில் சமத்துவ பொங்கல் விழா

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் கம்பன் நகரில் தேவி மாதேஸ்வரன் இல்லத்தில் கழகத்தின் சார்பில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. கழகத் தலைமைக் குழு உறுப்பினர் கேப்டன் அண்ணாதுரை பொங்கல் விழா சிறப்புரை நிகழ்த்தினார்.

இலக்கிய தளம் அன்பழகன், பகலவன் (மொழிப்போர் தியாகிகள் நினைவு குழு), மு.சாமிநாதன் (நாமக்கல் மாவட்டத் தலைவர்), ஆர் கே.குமார் (தி. க மாவட்டத் தலைவர்), ஸ்ரீ வடிவேலு (நகரச் செயலாளர்), மி.த தண்டபாணி (நகரத் தலைவர்), தோழர்கள் பிரகாஷ், மோகன், கார்த்தி சரவணன் ஆகியோரின் குடும்பமும் நிகழ்ச்சியில் பங்கெடுத்தனர்.

கம்பன் நகர் பொதுமக்கள் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. பகுதிக் குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாலை 4-மணியளவில் அனைவருக்கும் பரிசு வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிறைவாக சுதாமணி ராஜ் நன்றி கூறினார்.

## ஜெயந்தி–பாரி.சிவக்குமார் இல்லத் திறப்பு விழா

கழகத் தோழர்கள் ஜெயந்தி-பாரி.சிவக்குமார் இல்லத் திறப்பு விழா பிப்ரவரி-01 அன்று காலை 9 மணியளவில் மந்தைவெளியில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இருவரும் இணைந்து திறந்து வைத்தனர். பேராசிரியர்.சரசுவதி, மயிலாடுதுறை இளையராசா (தலைமைக் குழு உறுப்பினர்) மற்றும் இணையர்களின் குடும்பத்தினர் முன்னிலை வகித்தனர். பாரி.சிவக்குமார் நண்பரான தோழர் சக்திவேல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.





சென்னை மாவட்டக் கழகம் சார்பில் பெரியார் அம்பேத்கர் படம் பரிசாக கழகத் தலைவர் அவர்கள் பாரி சிவா அவர்களிடம் வழங்கினார். கழகத் தோழர் குமரன் தன்னுடைய ஆட்டோவில் எழுதியிருந்த "மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு" என்ற பெரியார் வாசகத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை. இராசேந்திரன் பார்வையிட்டனர்.

இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன் | ந. தட்சிணாமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் இராவணன், ஊடகவியலாளர் பிரகாசு, மயிலாப்பூர் சுகுமாறன், முழக்கம் உமாபதி, மனோகரன், பிரவீன், சிவா, மணி, அம்பிகா, வினோத், கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதி தலைவர்), கனி, அஜித், மனோஜ், தேன்மொழி, மாணவர் கழகம் குறளரசி, குடியரசு, இரண்யா, ப்ரித்தி, அகராதி, மஞ்சுநாத், செய்தியாளர் பிரசாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அண்ணா சிலைக்கு மரியாதை

பேரறிஞர் அண்ணா நினைவுநாளையொட்டி, (3/2/26) காலை 10 மணிக்கு, பத்ரிநாரயாணன் நினைவுப் படிப்பகத்தில் இருந்து ஊர்வலமாக சென்று இராயப்பேட்டையில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தோழர்கள் கொள்கை முழக்கமிட்டனர். சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர் மா. வேழ வேந்தன், மாவட்ட அமைப்பாளர் ம. கி. எட்வின் பிரபாகரன், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ப. அருண், திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் கோபிநாத், திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் த. நா. சூர்யா, தோழர்கள் இரண்யா, மகிழவன், குமார், தேன்மொழி, லட்சுமணன், லீலா, துரைராசு, மனோஜ், வீரமுத்து, செய்தியாளர் பிரசாந்த், சுகந்தன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# கழகத் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சிகள்!

## மாபெரும் கராத்தே உலக சாதனை நிகழ்ச்சி!

தமிழ்நாடு கிக் பாக்ஸிங் அசோசியேசன் மற்றும் சேலம் ராயல் பவர் அரிமா சங்கம் சார்பாக நடத்திய 1000-த்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்ற கராத்தே உலக சாதனை நிகழ்ச்சி சேலம் கருப்பூர் பத்மவாணி மகளிர் கல்லூரியில் 12.01.2026 திங்கட்கிழமை அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது.




பத்மவாணி மகளிர் கல்லூரி சேர்மேன் சத்யமூர்த்தி தலைமையேற்றார்.

சிவகேந்திரன் குட்டி (துணைத் தலைவர், தமிழ்நாடு கிக் பாக்சிங் அசோசியேசன்) முன்னிலை வகித்தார். சிவபெருமாள் (பொதுச்செயலாளர் - தமிழ்நாடு கிக் பாக்ஸிங் அசோசியேசன்) வரவேற்புரையாற்றினார்.

மகேஷ் (காஞ்சி மக்கள் மன்ற ஒருங்கிணைப்பாளர்), அரிமா விவேகானந்தன் (தமிழ்நாடு கிக் பாக்சிங் அசோசியேசன் மாநில வழக்கறிஞர் அணிச் செயலாளர்), பத்மவாணி மகளிர் கல்லூரி நிர்வாக அலுவலர் முத்துக்குமார் ஆகியோர் உரையாற்றினர். சௌந்திரராஜன் (பள்ளி தாளாளர்,சௌத் இந்தியன் மெட்ரிக்குலேசன்), கஞ்சமலை (பள்ளி தாளாளர், சுவாமி விவேகானந்தா மெட்ரிக்குலேசன்), முத்து (பள்ளி தாளாளர், நார்த் பார்க் மெட்ரிக்குலேசன்), முதல்வர் சுந்தர், வழக்கறிஞர் ஆனந்த் ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். கழகத் தலைவர், தமிழ்நாடு கிக் பாக்சிங் அசோசியேசன் தலைவருமான கொளத்தூர் மணி, மணி (ஓமலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கிக் பாக்சிங் நிர்வாகிகள் பிரகாஷ், துரை, சசிகுமார் மற்றும் கலந்து கொண்ட 1000-த்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கும் பதக்கம், சான்றிதழ் வழங்கப்பட்டது. தனசேகரன் (தமிழ்நாடு கிக் பாக்ஸிங் அசோசியேசன் மாநில துணை பொதுச்செயலாளர், சேலம் மாவட்ட பொறுப்பாளர்) நன்றியுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் கருப்பூர் சக்திவேல் (சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர்), காவை அவினாசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தோழர் சக்குபாய் நெடுஞ்செழியன் நினைவேந்தல்!

பெரியார் பேருரையாளர், ஆசீவக ஆய்வாளர், பேராசிரியர் முனைவர் தோழர் சக்குபாய் நெடுஞ்செழியன் அவர்களின் படத்திறப்பு - நினைவேந்தல் நிகழ்வு 26.01.2025 திங்கட்கிழமை காலை 9.30 மணி அளவில் திருச்சி, இராசாராம் சாலை, கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள கயிலை மணி அரங்கத்தில் நடைபெற்றது. நடராசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.



ஆ. இராசா (நாடாளுமன்ற உறுப்பினர்) அவர்கள் தோழர் சக்குபாய் நெடுஞ்செழியன் அவர்களின் படத்திறப்பு செய்து மலர்தூவி மரியாதை செலுத்தி நினைவேந்தல் உரையாற்றினார். அன்பில் மகேஷ் பொய்யாமொழி (பள்ளி கல்வித்துறை அமைச்சர்) அவர்கள் நினைவேந்தல் உரையாற்றினார். குடந்தை இகவரசன் சக்குபாய் நெடுஞ்செழியன் அவர்களின் நினைவைப் பகிரும் வகையில் கவிதை பாடல்கள் பாடினார்.

பெ. மணியரசன் (தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் தலைவர்), ஓய்வுப்பெற்ற ஐ.ஜி க.வடிவேல், மருத்துவர்கள் செந்தில்குமார், யாழினியன், நடராசன், இளவஞ்சி இளையகுமார், இராசா. இரகுநாதன், பாப்பாநாடு காமராசு,கவித்துவன், திருமாறன், அறிவு, பேராசிரியர் வீரமணி, பிரவீன், ஐயம் பெருமாள், ம.பொன்னிறைவன் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினார்கள். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சக்குபாய் மற்றும் அவரது கணவர் நெடுஞ்செழியன் ஆகியோரது பொது வாழ்வில் ஏற்பட்ட இன்ப, துன்பங்கள் மற்றும் நட்பு முறைகளைப் பற்றி நினைவுகளைப் பகிர்ந்து உரையாற்றினார். சக்குபாய் - நெடுஞ்செழியன் அவர்களது மகள் நகைமுத்து அவர்கள் நன்றியுரையாற்றினார்.

## ஜாதிய வன்கொடுமைகளுக்கு எதிரான கலந்தாய்வு கூட்டம்

தென் மாவட்டங்களில் அதிகரிக்கும் ஜாதிய வன்கொடுமைகள் பின்னணியும் சட்ட ரீதியான தீர்வும் என்ற தலைப்பில் எவிடென்ஸ் அமைப்பின் சார்பாக கலந்தாய்வு கூட்டம் 24.01.2026 அன்று காலை 10 மணியளவில் மதுரை, நரிமேடு பகுதியில் உள்ள பிசிஎஸ் ஹாலில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்றார்.



எவிடென்ஸ் கதிர் ( எவிடென்ஸ் அமைப்பின் செயல் இயக்குனர்) மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தேனி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல், விருதுநகர், தென்காசி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் அதிகளவு ஜாதிய வன்கொடுமைகள் நடந்து வருகின்றன. ஜாதிரீதியான படுகொலைகள், தாக்குதல்கள், ஆணவக் குற்றங்கள், பாலியல் வல்லுறவுகள் உள்ளிட்ட பல்வேறு வன்கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஜாதிய வன்கொடுமைகளை தடுப்பதற்கு எஸ்.சி./எஸ்.டி வன்கொடுமை தடுப்புச் சட்டம் இருந்த போதிலும் குற்றங்கள் குறைந்தபாடில்லை. ஜாதிய உணர்வுகளை தூண்டுகிற ஜாதிய சக்திகள் அதிகளவு வளர்ந்தும் வருகின்றன. அத்தகைய சக்திகளுக்கு எதிராக உரிய நடவடிக்கையும் எடுப்பதில்லை.

இவ்வன்கொடுமைகளுக்கு காரணமான சமூக, அரசியல், பொருளாதார நிலைகளை கண்டுணர்வது மிக முக்கியமான பணியாக கருதியும், அதுமட்டுமல்லாமல் வன்கொடுமைகளை தடுப்பதற்கென்று இருக்கக்கூடிய காவல்நிலையங்கள், நீதிமன்றங்கள், அரசின் பிற துறைகள் நியாயமாகவும் முழுமையாகவும் செயல்படும் நிலைகளையும் ஆராய்வது இக்காலகட்டத்தின் முக்கிய பணியாக கருதியும், சாதிய வன்கொடுமைகளுக்கான காரணங்கள் என்ன? அதற்கான தீர்வுகள் என்ன? என்பதையும் வன்கொடுமைகளுக்கு எதிராக இருக்கக்கூடிய சட்டங்கள், அரசு நிறுவனங்களின் பணிகளில் இருக்கக்கூடிய இடைவெளியை தீர்க்க என்ன செய்யப் போகிறோம்? என்கிற இரண்டு கட்ட நிலைகளை பற்றி இக்கலந்தாய்வு கூட்டத்திற்கு நோக்கவுரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி வன்கொடுமைகளுக்கான சமூக, அரசியல், பொருளாதார பின்னணி அதற்கான தீர்வுகளை பற்றியும் சமூக விரோதத்திற்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகவும் நடந்து கொள்ளும் ஆதிக்க ஜாதியினருக்கு எதிராக இடதுசாரி அமைப்புகள் ஒற்றுமையாக இருந்து வன்கொடுமை சம்பவங்களில் ஈடுபடுவர்களின் வழக்குகளை இறுதி வரை கண்காணித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதை வேண்டுகோளாக முன்வைத்து உரையாற்றினார். சமத்துவ வழக்கறிஞர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பார்வேந்தன் வன்கொடுமைகளுக்கான சமூக, அரசியல், பொருளாதார பின்னணி அதற்கான தீர்வுகளை பற்றி விளக்கவுரையாற்றினார்.

## மொழிப்போர் நினைவு உணர்ச்சி விழா மற்றும் பெரியார் நினைவு அறிவு விழா!

சூலூர் பாவேந்தர் பேரவையின் சார்பாக மொழிப்போர் நினைவு உணர்ச்சி விழா மற்றும் பெரியார் நினைவு அறிவு விழா கோவை மாவட்டம், சூலூரில் எஸ். ஆர். எஸ் திருமண மண்டபத்தில் 24.01.2026 (காரி) சனிக்கிழமை அன்று மாலை 5 மணியளவில் வெ.க.சண்முகவேல் (பாவேந்தர் பேரவைத் தலைவர்) தலைமையில் நடைபெற்றது. சூ.நா. வரதராசு (பாவேந்தர் பேரவைச் செயலாளர்) வரவேற்புரையாற்றினார்.

சூலூர் ஏ.டி.ஆர் பரதநாட்டியப் பள்ளி மாணவியரின் தமிழுணர்வு இசை நாட்டியத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களுக்கு இசையாலும் நடனத்தாலும் மாணவியர் உயிரூட்டிக் காண்போரை மெய்சிலிர்க்க வைத்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழினத்தின் மொழி உரிமை மீட்க உயிர்நீத்த மொழிப்போர் ஈகியர்களின் படத்தினை திறந்து வைத்தார். கடந்த 19.1.2026-ம் நாள் மறைந்த தன்மானப் பேராசிரியர் சக்குபாய் நெடுஞ்செழியன் அவர்களின் படத்தினை தேவி மன்னவன் (சூலூர் பேரூராட்சித் தலைவர்) திறந்து வைத்தார். சூலூர் பாவேந்தர் பேரவை முன்னாள் செயலாளர், மறைந்த தோழர் சூ.நா.தமிழ்நெஞ்சன் (எ) சக்திவேல் அவர்கள் படத்தைத் அ.வள்ளுவராசன் திறந்து வைத்தார்.




தமிழ்நாட்டளவில் சிறந்த பேரூராட்சி விருது பெற்றுள்ள சூலூர் பேரூராட்சித் தலைவர் திருமதி. தேவிமன்னவன் அவர்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி ’சூலூர் விருது’ வழங்கினார். ஊர்நலம், கல்வி மேம்பாட்டுப் பணிகளில் முன்னோடியாகத் திகழும் திருமதி. இனிதா குமார் அவர்களுக்கு திருமதி. விசயலட்சுமி நடராசன் ’சூலூர் விருது ’ வழங்கினார். பசுமை நலம், கட்டிடவியல் பணிகளில் முத்திரை பதித்து முன்னோடியாகத் திகழும் திரு. ’பசுமை நிழல்’ சூ.ஆ. விசயகுமார் அவர்களுக்குப் பேராசிரியர் சத்தியம்பெருமாள் பாலுசாமி ’சூலூர் விருது’ வழங்கினார். மருத்துவமனை நோயாளிகளின் பசிப்பிணி போக்கல், குருதிக்கொடை, விழிக்கொடை பணிகளின் முன்னோடி திரு.சூ.வே.தருமராசு அவர்களுக்கு சூலூர் பேரூராட்சி முன்னாள் துணைத்தலைவர் திரு. சூ.அ. செல்வராசு ‘சூலூர் விருது’ வழங்கினார்.

‘பெரியார் நெறியில் பெண்களிடம் விழிப்பூட்டுவோம்’ எனும் கருத்தரங்கில் தோழியர் கி.மலர்விழி வரதராசு, தோழியர் ப.ஞானசுந்தரி லோகநாதன், தோழியர் நா.தமிழ்ச்செல்வி கருத்துரையாற்றினர். மத மறுப்பு மணம் புரிந்தோர், ஜாதி மறுப்பு மணம் புரிந்தோர் ,புரோகித மறுப்பு மணம் புரிந்தோர், தூயதமிழ்ப் பெயர் தாங்கிய குழந்தைகள், தூயதமிழ்ப் பெயர் தாங்கிய வணிக நிறுவனத்தினர் ஆகியோரை சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில் பொன்னாடையும், கேடயமும் வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தனர்.

சூலூர் ஒன்றியத் தி.மு.க. செயலாளர் சூ.த.மன்னவன், விடியல் பதிப்பகம் சூ.இல.விசயகுமார் பாராட்டுரை வழங்கினர். தமிழுணர்வும் தன்மான உணர்வும் காக்கப்பட வேண்டியதன் தேவை குறித்தும் , விழா நிகழ்ச்சிகளின் நோக்கம் குறித்தும் புலவர் செந்தலை ந .கவுதமன் விளக்கிப் பேசினார். சூலூரில் 39ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் பாவேந்தர் பேரவையால் பெரியார், அண்ணா, கலைஞர் தந்த கொள்கைகளுக்கும் பாவேந்தர், பாவாணர், வே.ஆனைமுத்து சிந்தனைகளுக்கும் உரமூட்டப்பட்ட வழிகளையும் பணிகளின் பயனையும் அவர் விவரித்தார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். நம் அறிவை மதமூடச் சனாதனக் கூட்டம் முடக்கி வருவது குறித்தும் அவற்றை முற்போக்கு இயக்கங்கள் உடைத்துத் தகர்த்துத் தமிழ்நாட்டை முன்னேற்றி வரும் செயல்பாடுகள் குறித்தும் அவர் விளக்கிப் பேசினார். தி.மு.கழக ஆட்சியை மிகச் சிறப்பாக நடத்தும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சித் திறத்தை வியந்ததோடு, கல்வித்துறையில் திராவிடவியல் ஆட்சி அமைதியாக நிகழ்த்திவரும் அரிய சாதனைகளைப் பட்டியலிட்டுக்காட்டிச் சிந்தனை அலையை எழுப்பினார். பாவேந்தர் பேரவைப் பொருளாளர் சூ.ச. அங்கமுத்து நன்றியுரை கூறினார். அனைவருககும் இரவு விருந்து வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : February 06 , 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran